# பல்கலைக்கழக மைதானத்தை பயன்படுத்த அனுமதியினை பெற்றுக்கொண்டவர்களுக்கான நிபந்தனைகள்

1. அனுமதிபெற்றதை உறுதிப்படுத்தும் வகையில் பதிவாளரிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடிதத்தை நுழைவாயில் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட வேண்டும்.

2. பல்கலைக்கழகத்திற்கு உரித்தான விளையாட்டு உபகரணங்கள், அசையும் சொத்துக்கள் எதுவும் போட்டிகளுக்கு வழங்கப்படமாட்டாது.

3. ஒலிபெருக்கி பாவனை எமது பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையுறு கொடுக்காத வகையில் அமைதல் வேண்டும்.

4. போட்டியாளர்கள், உத்தியோகத்தர்கள், பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தை தவிர பல்கலைலைக்கழக வளாகத்தின் ஏனைய பகுதிகளுக்கு செல்வது அனுமதிக்கப்படமாட்டாது.

5. எந்த ஒரு வாகனமும் மைதானத்துக்குள் செல்வதையோ அல்லது தரிப்பிடத்தை விடுத்து நிறுத்தப்படுவதையோ அனுமதிக்கமாட்டாது.

6. வாளகத்தில் தரிப்பிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசத்தை மாத்திரம் வாகனம் நிறுத்த பயன்படுத்தலாம்.

7. எந்த ஒரு செயற்பாட்டும் பல்லைக்கழக கல்வி நடவடிக்கையையோ, நிர்வாக நடவடிக்கையையோ பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்.

8. விளையாட்டுப்போட்டி முடிவடைந்ததும் மைதானமும் அதன் சுற்றுச்சூழலும் உரியவாறு சுத்தம் செய்துவிட்டு செல்லல் வேண்டும்.

9. போட்டி நடைபெறும் தினத்திற்கு முன்னைய தினம் உடற்கல்விக்கு பொறுப்பான அதிகாரியிடம் போட்டி தொடர்பாக தொட்பு கொள்ளுவது அவசியம்.

10. ஆடைகள் மாற்றும் தேவையுள்ளவர்கள் திறந்த வெளியில் ஆடை மாற்றுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

11. பொருத்தமான உடையுடன் மைதானத்திற்குள் அணியின் ஆதரவாளர்கள், வீரர்கள் மைதானத்துக்குள் வரவேண்டும்.
    (சாரன் அனுமதிக்கப்பட மாட்டாது)

12. தங்கள் செயற்பாடுகள் திருப்தியானதாக காணப்படாத சந்தர்பத்தில் எதிர்வரும் காலத்தில் தங்களுடைய தேவைக்கு பல்கலைக்கழக மைதானத்தை வழங்க முடியாது என்பதனை மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றேன்.

13. பல்கலைக்கழக செத்துக்களுக்கு சேதம் ஏற்படும் நேரத்தில் அது தொடர்பான இழப்பீட்டு தொகையையும் பல்கலைக்கழகத்திற்கு குறித்த கழகம் அல்லது பொறுப்புக்கு உரியவர் செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்ற தவறும் சந்தர்பத்தில் தங்களுக்கு வழங்கப்பட்ட மைதான அனுமதியினை ரத்து செய்யும் அதிகாரம் கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு உண்டு.

விளையாட்டுத்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்